மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆற்றல்மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மீனவர்களே அவர்களுக்குத் தேவையான வீடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு புதிய உத்தரவை வழங்கி, ஒவ்வொரு ஆண்டும் 5½கோடி ரூபாய் செலவில் 2 ஆயிரம் வீடுகளை கட்டித் தருவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த 4 ஆண்டுக் காலத்தில் ஏறக்குறைய 24 கோடி ரூபாய்க்கு 9 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய மீனவ மக்களுக்காக கட்டித் தந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டும் கூட 5½ கோடி ரூபாய் செலவில் நம்முடைய ஆற்றல்மிக்க புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குக் கட்டித் தருவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். மேலும் மீனவ கிராமங்களில் அணுகு சாலைகள் (approach roads) மற்றும் இணைப்புச் சாலைகள் (link roads) போன்ற அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துவதற்காக உள்ளாட்சித் துறையுடன் கலந்து ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 360, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

360—

கன்னியாகுமரியில் காட்சி மையம் அமைத்தல்

***25695—**திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் சூரிய உதயம், சூரியன் மறையும் காட்சிகளைக் காண்பதற்கு காட்சி மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரியில் காட்சி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் எந்த அளவிலே உள்ளது ? எப்பொழுது அமுலுக்கு வரும்? அதற்குரிய பணம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

1995 ஏப்ரல் 19]

ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் அவர்களே இந்த சுற்றுலாத் துறைக்கும் பொறுப்பேற்று சுற்றுலாத் துறைக்கு பல்வேறு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில் 1991-92-ஆம் ஆண்டு 49 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மைய அரசு எவ்வளவு ரூபாய் வேண்டுமென்று கேட்டதற்கு, 6 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டத்தை மைய அரசுக்கு மாநில அரசு அனுப்பியது என்றும், அந்தத் திட்டத்தை 6 லட்சம் ரூபாயில் மாநில அரசே செய்யலாம் என்று மாநில அரசுக்கு மைய அரசு திருப்பி அனுப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா? இப்பொழுது பல லட்சம் பேர்கள் இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருகிறார்கள். சூரியன் உதிப்பதையும், சூரியன் அஸ்தமனம் ஆவதையும் ஓர் இடத்தில் நின்று பார்ப்பதற்கு ஓர் இடம் இல்லாமல் ஆங்காங்கே இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இதை நிவர்த்திச் செய்வதற்காக, பல லட்சம் பேர் வருகின்ற கன்னியாகுமரியில் மிகவும் முக்கியமான இடத்தில் ஒரு வியூ பாயிண்ட் வைப்பதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா? அதற்கு மாநில அரசினால் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா? பணி எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 லட்சம் ரூபாய் செலவில் அப்படி எந்தக் கருத்துருவும் மத்திய அரசுக்கு அனுப்பவில்லை. அங்கே வருகிற அதிகமான சுற்றுலாப் பயணிகளின் நலனைக் கருத்திலே கொண்டு ஒரு பெரிய அரங்கம் அமைப்பதற்கும், காட்சி மையம் அமைப்பதற்கும் 49 லட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசுக்குத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. மாநில அரசு உரிய பங்கைச் செலுத்துவதற்குத் தயாராக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தில் இரண்டு இடங்களில் மட்டும் சூரியன் உதயம், சூரியன் மறையும் காட்சிகளைக் காணலாம். ஒன்று கன்னியாகுமரி, மற்றொன்று கேப் ஆப் குட் ஹோப் என்ற நன்னம்பிக்கை முனை. இது ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென் கோடியில் உள்ள இடம். இன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உதயசூரியனை நிரந்தரமாக அஸ்தமனம் செய்த பெருமைக்குரிய (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தின் ஒப்பற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் உலகத்தில் மிகச் சிறந்த சுற்றுலா மையமான கன்னியாகுமரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் சூரியன் உதயத்தையும், சூரியன் மறையும் காட்சியையும்

நன்றாகக் காண்பதற்காக இன்று ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்கு 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கருத்தருவை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளதாக அறிகிறேன். அதை விரைவில் பெற்று, இந்த ஆண்டிலேயே செய்து தர அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.25

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்து 47 ஆண்டுகாலம் ஆகியும், மாண்புமிகு தமிழக முதல்வர் நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், 1992-93-ஆம் ஆண்டிலே மத்திய அரசுக்கு 49 இலட்சம் ரூபாய் செலவிலே காட்சி மையமும், அரங்கமும் அமைக்க நாம் கருத்துரு அனுப்பியும், மத்திய அரசு இதுவரையில் அந்தத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கவில்லை. நாங்கள் மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். மாநில அரசினுடைய பங்கைச் செலுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு தயாராக உள்ளது என்பதையும், இது குறித்து நாங்கள் தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

341—

கணேசபுரத்தில் வாக்குச்சாவடி அமைத்தல்

***23952**—*திரு. தா. வேடியப்பன்:*

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் ஒன்றியம், கணேசபுரம் கிராமத்தில் தனியாக வாக்குச்சாவடி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]